# நமது தின கனி

காலை நாளிதழ்

# NAMADHU DHINA KANI

Daily Morning

Vol : 01 | Issue : 42 | 4 Pages | 12.09.2023 | Tuesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur

மலர் : 01 | இதழ் : 42 | 4 பக்கங்கள் | 12.09.2023 | செவ்வாய்க்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர்


## கைவினை கலைஞர்களுக்கு நிதி உதவி: பிரதமர் மோடி 17ந்தேதி புதிய திட்டம் தொடக்கம்



புதுடெல்லி, செப். 12

பிரதமர் நரேந்திர மோடி சுதந்திர தின விழாவில் தேசிய கொடியேற்றிவைத்து பேசுகையில் 'பி.எம். விஸ்வகர்மா' என்ற பெயரில் பாரம்பரிய தொழில் கலைஞர்களுக்கு நிதி உதவி செய்யப்படும் என அறிவித்தார். இதை தொடர்ந்து இந்த திட்டத்திற்கு ரூ. 13 ஆயிரம் கோடி ஒதுக்கீடு செய்து பொருளாதார விவரங்களுக்கான கேபினட் கமிட்டி ஒப்புதல் அளித்தது. இந்தத் திட்டம் 20232024 முதல் 2027 2028 வரை 5 ஆண்டுகள் அமலில் இருக்கும். பிரதமரின் விஸ்வகர்மா திட்டத்தின் கீழ், கைவினைக் கலைஞர்கள் மற்றும் கைவினைத் தொழிலாளர்களுக்கு 'பிரதமர் விஸ்வகர்மா சான்றிதழ்' மற்றும் அடையாள அட்டை கிடைக்கும். மேலும், முதல் தவணையாக ரூ. 1 லட்சம் வரை வட்டியில்லா கடன் வழங்கப்படும். பிறகு 2ம் தவணையாக ரூ. 2 லட்சம் வரை 5 சதவீத வட்டியுடன் கடன் வழங்கப்படும். இந்தியா முழுவதும் கிராமப்புறங்களிலும் நகர்ப்புறங்களிலும் உள்ள கைவினைக் கலைஞர்கள், கைவினைத் தொழிலாளர்கள் இந்தத் திட்டத்தின் கீழ் பயன் அடைவார்கள். தச்சர், பொற்கொல்லர், குயவர், சிற்பிகள், கல் தச்சர்கள், காலணி தைப்பவர், காலணி தொழிலாளர், காலணி செய்பவர், கொத்தனார், கூடை, பாய், துடைப்பம் தயாரிப்பவர், கயிறு செய்பவர், பாரம்பரியமாக பொம்மைகள் செய்பவர், முடி திருத்தும் தொழிலாளர், பூமாலைகள் கட்டுபவர், சலவைத் தொழிலாளர், தையல்காரர், மீன்பிடி வலை தயாரிப்பவர், படகு தயாரிப்பவர், கவசம் தயாரிப்பவர், இரும்புக் கொல்லர், சுத்தியல் மற்றும் கருவிகள் செய்பவர்கள், பூட்டுகள் செய்பவர்கள் உள்ளிட்ட 18 வகையான தொழில்களில் ஈடுபடுவோர் இந்த திட்டத்தில் நிதி பெற தகுதி உடையவர்கள் ஆவர். முதல் ஆண்டில் 5 லட்சம் குடும்பங்களும், 5 ஆண்டுகளில் மொத்தமாக 30 லட்சம் குடும்பங்கள் இந்தத் திட்டத்தின் கீழ் பயன்பெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த திட்டத்தை பிரதமர் நரேந்திர மோடி வருகிற 17ந் தேதி 'விஸ்வகர்மா தினத்தில்' தொடங்கி வைக்கிறார். அதே நாளில் நாடு முழுவதும் 70 இடங்களில் நடைபெறும் நிகழ்ச்சியில் மத்திய மந்திரிகள் கலந்து கொள்கிறார்கள். மத்திய உள்துறை மந்திரி அமித்ஷா அகமதாபாத்திலும், பாதுகாப்பு மந்திரி ராஜ்நாத் சிங் லக்னோவிலும், நாக்பூரில் மத்திய மந்திரி நிதின் கட்கரி, ஜான்சியில் ஸ்மிருதி இரானி, ஜெய்ப்பூரில் பூபேந்தர் யாதவ், திருவனந்தபுரத்தில் ஜெய்சங்கர் ஆகியோர் பங்கேற்கிறார்கள். கைவினைஞர்கள் மற்றும் கைவினைஞர்களின் தயாரிப்புகள் மற்றும் சேவைகளின் தரம், அளவு மற்றும் சென்றடைவதை மேம்படுத்துவது மற்றும் உள்நாட்டு மற்றும் உலகளாவிய மதிப்பு சங்கிலியுடன் அவர்களை ஒருங்கிணைப்பதை இந்த திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

## வீட்டை விற்பதில் தகராறு: மனைவியை கொன்று, வீட்டிலேயே ஒளிந்து கொண்ட கணவன்




புது டெல்லி, செப். 12

புது டெல்லியை சேர்ந்த உச்ச நீதிமன்ற பெண் வழக்கறிஞர், ரேணு சின்ஹா. இவர் தனது கணவர் நிதின் நாத் சின்ஹாவுடன் டெல்லியின் நொய்டா பகுதியில் செக்டார் 30ல், அவர்களது சொந்த பங்களாவில் வசித்து வருகிறார். இவர்களது மகன் அயல்நாட்டில் வசிக்கிறார். ரேணுவிற்கு ஒரு சகோதரன் இருக்கிறார். நிதின் நாத் சின்ஹா, அவர்கள் வசித்து வரும் பங்களாவை விற்றுவிட விலை பேசியிருந்தார். அதற்கான முன்பணமும் வாங்கியிருந்தார். ஆனால், இந்த விற்பனையில் ரேணுவிற்கு சம்மதமில்லை. இதனால் கணவன் மனைவி இருவருக்கும் இடையே அடிக்கடி வாக்குவாதம் ஏற்பட்டது. இந்நிலையில் சில தினங்களுக்கு முன் இது விஷயமாக இருவருக்குமிடையே கடுமையான வாக்குவாதம் ஏற்பட்டு அது சண்டையாக மாறியது. அப்போது ஆத்திரத்தில் நிதின் நாத் சின்ஹா, ரேணுவை கொலை செய்தார். அவரது உடலை குளியலறையில் போட்டுவிட்டு, காவல்துறைக்கு பயந்து, அந்த பங்களாவிலேயே உள்ள ஒரு சரக்குகளை வைக்கும் அறையில் ஒளிந்து கொண்டார். இரு தினங்களாக தனது சகோதரியை தொடர்பு கொண்ட முயற்சிக்கும் போது அவரது செல்போன் தொடர்ந்து அணைத்து வைக்கப்பட்டிருப்பதால் சந்தேகம் கொண்ட ரேணுவின் சகோதரன், காவல் நிலையத்தில் புகார் அளித்தார். இதனையடுத்து, பங்களாவை சோதனையிட வந்த காவல்துறையினரின் தேடுதலில் ரேணுவின் உடல் குளியலறையில் கண்டெடுக்கப்பட்டது. அவரது கணவரை தொடர்பு கொள்ளும் முயற்சியில் காவல்துறையினர் ஈடுபட்ட போது அவரது செல்போன் சமிக்ஞை கடைசியாக பங்களாவில் இருந்தே வந்தது தெரிந்தது. இதனை தொடர்ந்து அவரை தேடும் வேட்டையில், அவர் அந்த பங்களாவில் சரக்கு அறையில் ஒளிந்திருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. அவரிடம் நடத்திய விசாரணையில் தனது மனைவியை கொலை செய்ததை அவர் ஒப்புக்கொண்டார். இதனையடுத்து அவர் கைது செய்யப்பட்டு காவலில் எடுக்கப்பட்டார். காவல்துறையினர் வழக்கு பதிவு செய்து விசாரணை செய்து வருகின்றனர்.

## இந்த ஆண்டும் தீபாவளி தினத்தன்று பட்டாசுகள் வெடிக்க தடை சுற்றுச்சூழல் மந்திரி தகவல்



டெல்லி, செப். 12

டெல்லி மாசுக்கட்டுப்பாடு குழு சார்பில் கடை வைப்பதற்கு உரிமம் வழங்கப்படவில்லை என்று சுற்றறிக்கை வெளியிட காவல்துறைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. பண்டிகை கொண்டாடுவது எவ்வளவு முக்கியமோ, அதே அளவு சுற்றுச்சுழலை காப்பதும் முக்கியம். மேலும் படிக்க டெல்லி: டெல்லியில் மாசுவை கட்டுப்படுத்தும் விதமாக இந்த ஆண்டு தீபாவளிக்கும் பட்டாசுகள் வெடிக்க தடை விதிக்க முதல்மந்திரி அரவிந்த் கெஜ்ரிவால் முடிவு செய்துள்ளதாக அம்மாநில சுற்றுச்சூழல் அமைச்சர் கோபால் ராய் தெரிவித்துள்ளார். மேலும், டெல்லியில் எந்த வகையான பட்டாசுகளை தயாரிப்பதும், சேமிப்பதும், விற்பனை செய்வதும், ஆன்லைன் டெலிவரி செய்வதும் மற்றும் வெடிப்பதும் முற்றிலும் தடை செய்யப்பட்டுள்ளது. டெல்லி மாசுக்கட்டுப்பாடு குழு சார்பில் கடை வைப்பதற்கு உரிமம் வழங்கப்படவில்லை என்று சுற்றறிக்கை வெளியிட காவல்துறைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. பண்டிகை கொண்டாடுவது எவ்வளவு முக்கியமோ, அதே அளவு சுற்றுச்சுழலை காப்பதும் முக்கியம் என்று டெல்லி மாநில சுற்றுச்சூழல் அமைச்சர் கோபால் ராய் தெரிவித்துள்ளார்.

# திருப்பத்தூர் மாவட்டத்தில் ஏற்பட்ட சாலை விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு நிதியுதவி: முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இரங்கல்

சென்னை, செப். 12

7 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற துயரமான செய்தியினைக் கேட்டு மிகுந்த வேதனை அடைந்தேன். உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும், அவர்களது உறவினர்களுக்கும் ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக்கொள்கிறேன்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறி இருப்பதாவது: வேலூர் மாவட்டம், பேரணாம்பட்டை அடுத்த ஓணான் குட்டை கிராமத்தைச் சேர்ந்த 24 நபர்கள் கடந்த 8ந் தேதி தனியார் சுற்றுலா மினி பேருந்து மூலம் பெங்களூருக்கு சுற்றுலா சென்றுவிட்டு இன்று சொந்த ஊர் திரும்பி வரும் போது திருப்பத்தூர் மாவட்டம், நாட்றம்பள்ளி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட சண்டியூர் என்ற இடத்தில் வாகன பழுது காரணத்தினால் தேசிய நெடுஞ்சாலை சென்டர் மீடியன் ஓரத்தில் நிறுத்தி சரி செய்து கொண்டிருந்தனர். இதில் பயணித்த பயணிகள் நிறுத்தப்பட்ட வாகனத்தின் முன் அமர்ந்திருந்தனர். அப்போது பின்னால் வந்த லாரி மினி பேருந்தின் மீது எதிர்பாராதவிதமாக மோதி ஏற்பட்ட விபத்தில் பழுதடைந்த வாகனத்தின் முன்னால் அமர்ந்திருந்த செல்வி (எ) சேட்டம்மாள், (வயது 55), மீரா, (51), தேவகி, (50), திலகவதி, (50), சாவித்ரி, (42), கீதாஞ்சலி, (35) மற்றும் தெய்வானை, (32) ஆகிய 7 பேரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற துயரமான செய்தியினைக் கேட்டு மிகுந்த வேதனை அடைந்தேன்.

உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும், அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு அவர்களது குடும்பத்தினருக்கு தலா ஒரு லட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிட உத்தரவிட்டு உள்ளேன். மேலும் இவ்விபத்தில் காயமடைந்து கிருஷ்ணகிரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு நிவாரணத் தொகையாக தலா ரூ. 50 ஆயிரம் வழங்கிடவும் அவர்களுக்குச் சிறப்பான சிகிச்சை அளிக்கவும் உத்தரவிட்டுள்ளேன். இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

# திருப்பூர் அருகே மனைவியின் தங்கையை கர்ப்பமாக்கிய வாலிபர் கைது

திருப்பூர், செப். 12

மனைவியின் தங்கையான 17 வயது சிறுமியிடம் காதலிப்பதாக ஆசைவார்த்தை கூறி பழனிசாமி பழகி வந்தார். சமீபத்தில் சிறுமி 5 மாதம் கர்ப்பமாக இருப்பது தெரிய வந்தது.

காஞ்சிபுரம் சூரிய நல்லூரை சேர்ந்தவர் பழனிசாமி (வயது 25). இவர் காங்கயத்தை சேர்ந்த 25 வயதான இளம்பெண்ணை திருமணம் செய்தார்.

அவரது மனைவி 2வதாக கர்ப்பம் தரித்த போது மனைவியை பார்ப்பதற்காக பழனிச்சாமி அடிக்கடி காங்கயம் வந்து சென்றார். அப்போது மனைவியின் தங்கையான 17 வயது சிறுமியிடம் காதலிப்பதாக ஆசை வார்த்தை கூறி பழனிசாமி பழகி வந்தார்.

மேலும் வீட்டில் யாரும் இல்லாத நேரத்தில் சிறுமியிடம் பலமுறை பாலியல் அத்துமீறலில் பழனிசாமி ஈடுபட்டார். சமீபத்தில் சிறுமி 5 மாதம் கர்ப்பமாக இருப்பது தெரிய வந்தது.

குடும்பத்தினர் விசாரித்த போது, பழனிசாமி பாலியல் அத்துமீறலில் ஈடுபட்டது தெரியவந்தது. இதனால் அதிர்ச்சி அடைந்த சிறுமியின் பெற்றோர் பழனிசாமி மீது காங்கயம் அனைத்து மகளிர் போலீசில் புகார் செய்தனர்.

போலீசார் போக்சோ வழக்குப்பதிவு செய்து பழனிசாமியை கைது செய்தனர்.

# பன்னாட்டு நிறுவனங்கள் பருத்தி இருப்பு விவரங்களை தெரிவிக்க வேண்டும்: சைமா வலியுறுத்தல்

திருப்பூர், செப். 12

பருத்தி விலை நாள்தோறும் மாறுபடுவதால் நூல் விலையும் உயர்ந்து கொண்டே செல்கிறது. ஒரு கேண்டி ரூ.60 ஆயிரம் முதல் ரூ.70 ஆயிரம் வரையில் விற்பனை செய்கின்றனர்.

இந்தியாவில் உள்ள பன்னாட்டு நிறுவனங்கள் பருத்தி இருப்பு குறித்த விவரங்களை தெரிவிக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சைமா (தென்னிந்திய பனியன் உற்பத்தியாளர்கள் சங்கம்) வலியுறுத்தியுள்ளது. இது குறித்து மத்திய ஜவுளித்துறை அமைச்சர் பியூஷ் கோயலுக்கு, சைமா தலைவர் வைகிங் ஏ.சி.ஈஸ்வரன் அனுப்பியுள்ள மனுவில் கூறியுள்ளதாவது: பருத்தி விலை நாள்தோறும் மாறுபடுவதால் நூல் விலையும் உயர்ந்து கொண்டே செல்கிறது. இதனால் பின்னலாடை உற்பத்தி, கைத்தறி மற்றும் விசைத்தறி தொழில்கள் கடும் சிரமத்தில் உள்ளன. தொழிலாளர்கள் வேலை வாய்ப்புகளை இழக்க வேண்டிய சூழ்நிலையும் ஏற்படவும் வாய்ப்புள்ளது.

நமது நாட்டில் நமக்கு தேவையான அளவு பருத்தி உற்பத்தி செய்தும் பற்றாக்குறை ஏற்பட பன்னாட்டு நிறுவனங்களின் செயல்பாடுகள்தான் காரணமாக உள்ளன. பருத்தி விளைச்சல் உள்ள காலங்களில் ஒரு கேண்டி 365 கிலோ ரூ.50 ஆயிரம் முதல் ரூ.55 ஆயிரம் வரையில் குறைந்த விலையில் வாங்கி பல லட்சம் பேல்களை இருப்பு வைத்து கொள்கின்றனர். பின்னர் பருத்தி விளைச்சல் காலம் முடிவடைந்தவுடன் செயற்கை பற்றாக்குறையை உருவாக்கி ஒரு கேண்டி ரூ.60 ஆயிரம் முதல் ரூ.70 ஆயிரம் வரையில் விற்பனை செய்கின்றனர். இந்த காலகட்டத்தில் நூல் விலையும் உயர்ந்து கொண்டே செல்கிறது. ஆகவே, பன்னாட்டு நிறுவனங்கள் பருத்தி இருப்பு குறித்த விவரங்களை வெளியிட மத்திய அரசு நடவடிக்கை எடுத்து ஜவுளி தொழிலைப் பாதுகாக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# குடிநீர் திட்டப்பணிகளை விரைந்து முடிக்க வேண்டும் அதிகாரிகளுக்கு எம்.எல்.ஏ., அறிவுறுத்தல்

திருப்பூர், செப். 12

குடிநீர் திட்டப்பணிகள் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் திருப்பூர் குமார் நகரில் உள்ள வடக்கு சட்டப் பேரவை உறுப்பினர் அலுவலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்துக்கு திருப்பூர் வடக்கு சட்டமன்ற தொகுதி உறுப்பினர் கே.என்.விஜயகுமார் தலைமை வகித்தார். இதில் அவர் பேசியதாவது: திருப்பூர் வடக்கு சட்ட மன்ற தொகுதிக்குட்பட்ட திருப்பூர் ஒன்றியம் பட்டம்பாளையம், சொக்கனூர், மேற்குபதி, வள்ளிபுரம், தொரவலூர், ஈட்டிவீரம்பாளையம், பெருமாநல்லூர், காளிபாளையம், கணக்கம்பாளையம், பொங்குபாளையம் ஆகிய 10 ஊராட்சிகளுக்கு அன்னூர்மேட்டுப்பாளையம் குடிநீர் திட்டப்பணிகள் கடந்த ஆட்சியில் தொடங்கப்பட்டன. இப்பணிகளை செப்டம்பர் மாத இறுதிக்குள் முடித்து பொதுமக்களின் பயன்பாட்டுக்கு கொண்டுவரவேண்டும் என்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அறிவுறுத்தினார். கூட்டத்தில் ஒன்றியக் குழுத் தலைவர் சொர்ணாம்பாள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் வேலுசாமி, ஜோதிநாத், ஒன்றிய உதவிப்பொறியாளர்கள் கற்பகம், மகேஸ்வரி, ஒன்றியக்குழு உறுப்பினர் ஐஸ்வர்ய மகராஜ் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.



# ஆபத்து கால முதலுதவி விழிப்புணர்வு நிகழ்ச்சி

அவிநாசி, செப். 12

அவிநாசி அரசு உயர்நிலைப் பள்ளியில் ஆபத்து கால முதலுதவி குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. பாதிக்கப்பட்டவர்களை பாதுகாப்பான முறையில் மீட்பது குறித்து செயல்முறை விளக்கமளிக்கப்பட்டது.

உலக முதலுதவி தினத்தையொட்டி அவிநாசி அரசு உயர்நிலைப் பள்ளியில் ஆபத்து கால முதலுதவி குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்திய மருத்துவக்கழகத்தின்கீழ் இயங்கும் 108 அவசர ஊர்தி இயக்குநரகம், தனியார் அவசர ஊர்திகள் சங்கம் ஆகியவை சார்பில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், யூத் ரோட்டரி சங்க பொறுப்பாளர் ராஜ்குமார், 108 அவசர ஊர்தி ஊழியர்கள் ராஜேஷ், மனோஜ், மோகன்ராஜ் ஆகியோர் முதலுதவி குறித்த செயல்முறை விளக்கமளித்தனர். இதில், இயற்கை பேரிடரில் பாதிக்கப்படுபவர்களை எவ்வாறு மீட்பது, முதலுதவி சிகிச்சை அளிப்பது, எலும்பு முறிவு, மாரடைப்பு, மூச்சு திணறல் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டவர்களை பாதுகாப்பான முறையில் மீட்பது குறித்து செயல்முறை விளக்கமளிக்கப்பட்டது.

## ஈரோடு மண்டல பேரூராட்சிகள் உதவி இயக்குநர் அவிநாசியில் ஆய்வு

அவிநாசி, செப். 12
பூங்காவில் தயாரிக்கப்படும் மண்புழு உரம், இயற்கை உரம் ஆகியவற்றை ஆய்வு செய்தார் கழிவுகளில் இருந்து மாற்று பொருட்கள் உற்பத்தி செய்யவும் அதிகாரிகளை அறிவுறுத்தினார்.

ஈரோடு மண்டல பேரூராட்சிகள் உதவி இயக்குநர் மணிகண்டன் அவிநாசி பேரூராட்சிக் குட்பட்ட 18 வார்டுகளில் உள்ள வீடுகளிலிருந்து நாள்தோறும் சேகரமாகும் குப்பைகள் மூலம் கைகாட்டிபுதூர் வளம் மீட்பு பூங்காவில் தயாரிக்கப்படும் மண்புழு உரம், இயற்கை உரம் ஆகியவற்றை ஆய்வு செய்தார்.

இதைத்தொடர்ந்து செழிப்பு, பசுமை உரம் குறித்து விவசாயிகள், பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தவும், கழிவுகளில் இருந்து மாற்று பொருட்கள் உற்பத்தி செய்யவும் அதிகாரிகளை அறிவுறுத்தினார். பேரூராட்சி செயல் அலுவலர் (பொறுப்பு) இந்துமதி, சுகாதார ஆய்வாளர் கருப்புசாமி, தலைமை எழுத்தர் பாலசுப்பிரமணி உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

## உடுமலையில் குறுமைய விளையாட்டு போட்டி

உடுமலை, செப்.12
3 நாட்கள் நடைபெறும் இந்த போட்டியில் 106 பள்ளிகளைச் சேர்ந்த 1500 வீரர் வீராங்கனைகள் கலந்து கொண்டுள்ளனர். வெற்றியாளர்களுக்கு கோப்பைகள், பதக்கங்கள், சான்றிதழ்கள் உள்ளிட்ட பரிசுகள் வழங்கப்பட்டது.



பள்ளி கல்வித்துறையின் சார்பில் உடுமலை அளவிலான குறுமைய தடகள போட்டிகள் உடுமலை அரசு கலைக்கல்லூரி மைதானத்தில் தொடங்கியது.

போட்டிகளை காரத்தொழுவு அரசு மேல்நிலைப்பள்ளி நடத்தி வருகிறது. 3 நாட்கள் நடைபெறும் இந்த போட்டியில் 106 பள்ளிகளைச் சேர்ந்த 1500 வீரர் வீராங்கனைகள் கலந்து கொண்டுள்ளனர். 2 ம் நாள் நிகழ்வாக நேற்றும் 14 வயது, 17 வயது மற்றும் 19 வயதுக்கு உட்பட்டோர் பிரிவில் போட்டிகள் நடைபெற்றது.

ஆயிரத்து 500 மீட்டர், 600,100,80 மீட்டர் ஓட்டப்பந்தயம், தடைதாண்டுதல் ஓட்டம், 400 மீட்டர் தடை தாண்டும் ஓட்டம், நீளம், உயரம் தாண்டுதல், தட்டு எறிதல் உள்ளிட்ட பல்வேறு போட்டிகள் ஒன்றன் பின் ஒன்றாக நடைபெற்றது.

அப்போது சக வீரர்கள், பயிற்சியாளர்கள் போட்டியில் பங்கேற்றவீரர்களுக்கு ஊக்கம் அளித்து வெற்றி பெற உறுதுணையாக இருந்தனர்.

அதைத்தொடர்ந்து வெற்றியாளர்களுக்கு கோப்பைகள், பதக்கங்கள், சான்றிதழ்கள் உள்ளிட்ட பரிசுகள் வழங்கப்பட்டது. அப்போது அரசு, அரசு உதவி பெறும் பள்ளி மற்றும் தனியார் பள்ளியை சேர்ந்த ஆசிரியர்கள், பயிற்சி யாளர்கள், பெற்றோர்கள் உடன் இருந்தனர். இன்றுடன் தடகள போட்டிகள் நிறைவு பெற உள்ளது.

## உடுமலையில் விதிகளை மீறும் வாகனங்களால் பொதுமக்கள் அவதி

உடுமலை, செப். 12
நகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் அரசு, தனியார் அலுவலகங்கள், தொழில் நிறுவனங்கள், ஜவுளி, மளிகை மற்றும் சில்லறை விற்பனை கடைகள் செயல்பட்டு வருகிறது. ஒரு சிலரின் சுயநோக்கம் காரணமாக வாகன ஓட்டிகள் பொதுமக்கள் அவதிக்கு உள்ளாவது வேதனை அளிக்கிறது.



உடுமலை நகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் அரசு, தனியார் அலுவலகங்கள், தொழில் நிறுவனங்கள், ஜவுளி, மளிகை மற்றும் சில்லறை விற்பனை கடைகள் செயல்பட்டு வருகிறது. இந்தநிலையில் கடைகளுக்கு சரக்குகளை ஏற்றிக் கொண்டு வருகின்ற கனரக லாரிகள் பிரதான மற்றும் இணைப்பு சாலைகளில் ஆங்காங்கே நிறுத்தப்பட்டு விடுகிறது. இதனால் அந்த வழியாக செல்கின்ற வாகன ஓட்டிகள், பொதுமக்கள் அவதிக்கு உள்ளாகி வருகிறார்கள். இது குறித்து நிர்வாகமும் போக்குவரத்து போலீசாரும் கண்டு கொள்வதில்லை. போக்குவரத்து நெருக்கம் மிகுந்த பகல் வேளையில் கனரக வாகனங்கள் நகருக்குள் வரக்கூடாது என்ற விதி இருந்தும் அதை பின்பற்றாமல் வாகனங்களை கொண்டு வந்து சாலையில் நிறுத்தி விடுகின்றனர். இதனால் அவசர கால உதவியை பெறுவதில் கூட தடங்கல்கள் ஏற்படுகிறது. ஒரு சிலரின் சுயநோக்கம் காரணமாக வாகன ஓட்டிகள் பொதுமக்கள் அவதிக்குஉள்ளாவதுவேதனை அளிக்கிறது. மேலும் சாலையை அடைத்து வாகனங்கள் நிறுத்தப்படுவதால் மாற்று வழியை தேடி செல்ல வேண்டிய சூழலும் வாகன ஓட்டிகளுக்கு ஏற்படுகிறது. இதனால் கால நேர விரையம், எரிபொருள் செலவும் கூடுதலாக ஏற்படுகிறது. எனவே போக்குவரத்து இடையூறு ஏற்படும் விதத்தில் நிறுத்தப்படும் வாகனங்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். அத்துடன் கனரக வாகனங்கள் பகல் வேளையில் நகரப்பகுதியில் நுழைவதற்கு தடை விதிக்க வேண்டியது அவசியமாக உள்ளது.

## ரூ.1.65 கோடிக்கு கொப்பரை ஏலம்

ஈரோடு, செப். 12
கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் கொப்பரை ஏலம் நடைபெற்றது. மொத்தம் ரூ.1.65 கோடிக்கு கொப்பரை விற்பனை நடைபெற்றது.

பெருந்துறை வேளாண்மை பொருள்கள் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் கொப்பரை ஏலம் நடைபெற்றது.

பெருந்துறை சுற்று வட்டார பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள், 4,498 மூட்டைகளில் 2 லட்சத்து 17 ஆயிரம் கிலோ கொப்பரையை விற்பனைக்குக் கொண்டு வந்திருந்தனர். இதில் முதல் தர கொப்பரை குறைந்தபட்சமாக கிலோ, ரூ.72.37க்கும், அதிகபட்சமாக ரூ.81.99க்கும் விற்பனையாயின. 2ம் தரக் கொப்பரை குறைந்த பட்சமாக ரூ.38க்கும்,

அதிகபட்சமாக ரூ.76.89க்கும் விற்பனையாயின. மொத்தம் ரூ.1.65 கோடிக்கு கொப்பரை விற்பனை நடைபெற்றது.

## நீலகிரியில் தேயிலை விவசாயிகள் தொடர் உண்ணாவிரத போராட்டம்

நீலகிரி, செப். 12
ஊர்வலமாக புறப்பட்டு சென்று எத்தையம்மன் கோவிலில் வழிபாடு தேயிலை வர்த்தகர்களை உடனடியாக இணைக்க வாரிய அதிகாரி உறுதி



நீலகிரி மாவட்டத்தில் தேயிலைக்கு உரிய விலை வேண்டியும், சென்னை உயர் நீதிமன்ற தீர்ப்பை அமுல்படுத்த கோரியும், தேயிலை வாரியம் உடனடியாக 30ஏ சட்டத்தை அமல்படுத்த கோரியும் அங்கு உள்ள விவசாயிகள் கடந்த 1ந்தேதி முதல் கோத்தகிரி அருகே நட்டக்கல் பகுதியில் உண்ணாவிரத போராட்டம் நடத்தி வருகின்றனர். இது 11வது நாளாக இன்றும் தொடர்ந்து நடந்து வருகிறது. இதன் ஒரு பகுதியாக நாக்குபெட்டா படுகர் நல சங்கம் சார்பில் நேற்று 10 வது நாள் தொடர் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தப்பட்டது. பொரங்காடு சீமை படுகர் நலச்சங்க தலைவர் தியாகராஜன் தலைமை தாங்கி தொடங்கி வைத்தார். இதில் பேரகணி, தாந்தநாடு, புடியங்கி, கன்னேரிமுக்கு, அளியூர், ஒடேன், உல்லத்தட்டி ஆகிய, கிராமங்களைசேர்ந்த 100க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர். முன்னதாக விவசாயிகள் அந்தந்தகிராமங்களில்இருந்து ஊர்வலமாக புறப்பட்டு குலதெய்வம் எத்தையம்மன் கோவிலுக்கு சென்றனர். அங்கு அவர்கள் அம்மனை மனமுருக வழிபட்டனர். பின்னர் மீண்டும் பேரணியாக வந்திருந்து உண்ணாவிரத போராட்டத்தில் கலந்து கொண்டனர். நீலகிரி தேயிலை விவசாயிகளின் உண்ணா விரத போராட்டத்திற்கு வந்திருந்த தேயிலை வாரிய உறுப்பினர் ராஜேஷ்சந்தர் பேசுகையில், தேயிலை தொழிற்சாலைகள் சட்டம் 30 ஏ பிரிவில் தற்போது தேயிலை விவசாயிகள் இணைக்கப்பட்டு உள்ளனர்.

மேலும் தேயிலை வர்த்தகர்களை உடனடியாக இணைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதி அளித்தார். இதேபோல ஊட்டியில் உள்ள குருத்துளி, தங்காடு ஆகிய பகுதிகளிலும் தேயிலை விவசாயிகள் போராட்டம் நடத்தப்பட்டு வருகிறது. மேலும் நீலகிரி மாவட்டத்தின் அனைத்து கிராமங்களை சேர்ந்த விவசாயிகள், தேயிலை பறிக்க செல்லாமல் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

நமது தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066

## மண் வளத்தை அதிகரித்தால் பயிர்கள் செழித்து வளரும்



வேலூர், செப். 12
வேலூர் மாவட்ட விதைச்சான்று மற்றும் அங்ககச்சான்று உதவி இயக்குனர் தேன்மொழி கூறியதாவது; நிலத்தின் நலம் மற்றும் வளம் அதில் சாகு படி செய்யும் பயிருக்கு ஏற்ப மாறுபடும். அதைஅப்பயிரின்வேரைச் சுற்றியுள்ள மண்ணில் உள்ள நுண்ணுயிரிகளின் அளவைப் பொறுத்து கணிக்கலாம். மேலும் இயற்கை முறையில் மண்ணின் வளத்தை அதிகரிக்க பல தானிய விதைப்பு செய்து அதை அந்த நிலத்திலேயே மடித்து உழவு செய்து மண் வளத்தை அதிகரிக்கலாம். அதற்கு ஒரு ஏக்கர் நிலத்திற்கு அனைத்து வகை பயிரிலும் சேர்த்து 25 கிலோ தானியங்களை எடுத்து கலந்து விதைப்பு செய்ய வேண்டும். அதாவது பயறுவகை பயிர்களான தட்டைபயறு, மொச்சை, அவுரி, கொழிஞ்சி ஆகியவற்றில் தலா 2 கிலோ வீதம் 8 கிலோவும், தானிய வகை பயிர்கள் சோளம், கம்பு, கேழ்வரகு, மக்காச்சோளம் ஆகியவற்றில் தலா 2 கிலோ வீதம் 8 கிலோவும், எண்ணெய் வித்து பயிர்கள் ஆமணக்கு, நிலக்கடலை, எள் இவைகளில் தலா 2 கிலோ வீதம் 6 கிலோவும், நறுமணப் பயிர்களான கொத்தமல்லி, கடுகு, பெருஞ்சீரகம் இவைகளில் தலா 700 கிராமும், கடலை பிண்ணாக்கு 40 கிலோ மற்றும் வேப்பம் பிண்ணாக்கு 60 கிலோ சேர்த்து நிலத்தில் மடித்து உழவு செய்வதன் மூலம் அனைத்து வகையான சத்துக்களையும் பயிர் களுக்கு கிடைக்க செய்ய லாம். இதனால் மண்ணின் கரிமச்சத்து அதிகரிப்பதாலும் மண்ணின் காற்றோட்டம் அதிகரிப்பதாலும் மண்ணில் உள்ள நுண்ணுயிரிகளின் எண்ணிக்கை அதிகப்படுத்தப்பட்டு அதிகளவு மணிச்சத்தை பயிருக்கு கிடைக்க வழி வகை செய்கிறது. இதனால் பயிரின் வேர் வளர்ச்சி தூண்டப் படுவதால் பயிர் நன்கு செழித்து வளர்வதுடன் நல்ல மகசூல் கிடைக்கும். மேலும் வறட்சியை தாங்கி வளர வழிவகை செய்கிறது. எனவே இயற்கை வேளாண்மையில் ஆர்வம் உள்ள விவசாயிகள் தொழிற்நுட்பத்தினை கடைபிடித்து பயன்பெறலாம்.

இவ்வாறு அவர் கூறினார்.

## உயர்கோபுர மின்கம்பிகளை மாற்றி அமைத்ததால் தென்னை விவசாயம் பாதிப்பு

கோவை, செப். 12
கோவை கலெக்டர் அலுவலகத்தில் இன்று மக்கள் குறைதீர்ப்பு முகாம் நடைபெற்றது. இதில் பொது மக்கள் மற்றும் பல்வேறு அமைப்புகளை சேர்ந்தவர்கள் தங்களது கோரிக்கைகள் தொடர்பான மனுக்களை கலெக்டரிடம் அளித்தனர். தமிழ்நாடு விவசாயிகள் சங்கத் தலைவர் சு. பழனிசாமி தலைமையில் விவசாயிகள் மனு அளிக்க வந்தனர்.



அந்த மனுவில் கூறியிருப்பதாவது: நவமலை முதல் உடுமலை வரை உள்ள எங்கள் விளை நிலங்கள் வழியாக செல்லும் உயர்மின் கோபுரங்கள் மின் கம்பிகள் மற்றும் உதிரி பாகங்களை மாற்றி அமைக்க உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. ஏற்கனவே உயர்மின் கோபுரங்கள் மற்றும் மின் வழி தடங்களினால் பெருவாரியான நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இந்த திட்டம் ஆரம்பிக்கப்பட்ட காலங்களில் விவசாயிகள் அனைவரும் குறுகிய கால பயிர்களையே சாகுபடி செய்து வந்தனர் இதனால் எந்த பாதிப்பும் இல்லாத காரணத்தினால் அன்றைய அரசு பாதிக்கப்பட்ட நிலத்திற்கு எந்த இழப்பீ டும் வழங்கவில்லை. ஆனால் இன்று வன விலங்குகள் விவசாய நிலங்களை தொடர்ந்து சேதப்படுத்துவதால் எந்த குறுகிய கால விவசாயமும் செய்ய முடியாத நிலையில் உள்ளோம். தென்னை விவசாயம் மட்டுமே எங்கள் வாழ்வாதாரமாகக் கொண்டு வாழ்ந்து வருகிறோம். எனவே உயர்மின் கோபுரங்கள், உயர்மின் அழுத்த கம்பிகள் செல்லும் விவசாய நிலங்கள் மதிப்பிழந்து காணப்படுகின்றன. மீண்டும் விரிவாக்கம் செய்தால் எங்கள் வாழ்வாதா ரமாக விளங்கும் தென்னை விவசாயத்திற்கும், குடியிருப்பு வீடுகள் பண்ணைகள், பாசன கிணறுகள், ஆழ்துளை கிணறுகள் ஆகியவை அதன் அருகிலேயே அமைந்துள்ளதால் பெரிதும் பாதிக்கப்படும். எனவே இந்த பணிகள் தொடங்கும் முன்பு ஏற்படஉள்ளஇழப்பீட்டினை முறையாக கணக்கிட்டு, தென்னை மரத்தின் காய்ப்பு திறன் பற்றி வேளாண் துறையின் கணக்கீடு அடிப்படையில் சரியான நிவாரணத் தொகை அளிக்க வேண்டும். இவ்வாறு அந்த மனுவில் கூறப்பட்டிருந்தது. ராஷ்ட்ரிய இந்து மகாசபாவின் மாநில தலைவர் வேலுசாமி தலைமையில் நிர்வாகிகள் கலெக்டர் அலுவலகத்திற்கு வந்து மனு கொடுத்தனர். அவர்கள் அளித்த மனுவில் குண்டுவெடிப்பு குற்றவாளிகளை பேரறிஞர் அண்ணா பிறந்த நாளை முன்னிட்டு விடுதலை செய்ய சிலர் கோரிக்கை விடுத்து வருகின்றனர். ஆனால் கோவை குண்டு வெடிப்பு கைதிகளை விடுதலை செய்யக்கூடாது. இந்த விவகாரத்தை தமிழக அரசின் கவனத்திற்கு கொண்டு சென்று பரிசீலனை செய்ய வேண்டும் என தெரிவித்து இருந்தனர்.

## டெங்குவால் உயிரிழந்த சிறுவன் வசித்த பகுதியில் மாநகராட்சி கமிஷனர் ஆய்வு

சென்னை, செப். 12
டெங்கு காய்ச்சல் பாதிப்பு கடந்த காலங்களை விட கட்டுப்பாட்டுக்குள் உள்ளது. டெங்கு பரிசோதனை எண்ணிக்கை கடந்த 2 ஆண்டுகளை விட இந்த வருடம் அதிகமாக செய்யப்பட்டுள்ளது.



தமிழக அரசின் தடுப்பு நடவடிக்கையால் டெங்கு பாதிப்பு குறைந்துள்ளதாகவும் தற்போது 253 பேர் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருவதாகவும் சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது. சென்னை மதுரவாயலில் 4 வயது சிறுவன் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டு உயிரிழந்த சம்பவம் பெரும் அதிர்வலையை ஏற்படுத்தியது. டெங்கு காய்ச்சல் பாதிப்பு கடந்த காலங்களை விட கட்டுப்பாட்டுக்குள் உள்ளது. கடந்த வருடம் 6,430 பேர் டெங்குவால் பாதிக்கப்பட்ட நிலையில் இந்த வருடம் நேற்று வரை 3,992 பேர் மட்டும் டெங்குவிற்கு சிகிச்சை பெற்றுள்ளனர். தற்போது மருத்துவமனைகளில் 253 பேர் சிகிச்சை பெற்று வருகிறார்கள். ஜனவரி மாதத்தில் 866 பேர் டெங்குவால் பாதிக்கப்பட்டனர். பிப்ரவரியில் 641, மார்ச் 512, ஏப்ரல் 302, மே 271, ஜூன் 364, ஜூலை 353, ஆகஸ்ட் 535, செப்டம்பரில் 148 எனபடிப்படியாகபாதிப்பு குறைந்துள்ளது. டெங்கு பரிசோதனை எண்ணிக்கை கடந்த 2 ஆண்டுகளை விட இந்த வருடம் அதிகமாக செய்யப்பட்டுள்ளது. 2021ல் ஒரு லட்சத்து 73 ஆயிரம் பரிசோதனை செய்யப்பட்டது. 2022ல் 2 லட்சத்து 65 ஆயிரத்து 834 பேர் பரிசோதனை செய்தனர். இந்த வருடம் இதுவரையில் 2 லட்ச்தது 12 ஆயிரத்து 121 பேருக்கு டெங்கு பரிசோதனை செய்யப்பட்டதாக சுகாதாரத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதற்கிடையில் டெங்குவால் உயிரிழந்த சிறுவன் வீட்டிற்கு சென்னை மாநகராட்சி கமிஷனர் ஜெ.ராதாகிருஷ்ணன் நேரில் சென்று அவரது பெற்றோருக்கு ஆறுதல் கூறினார். மேலும் மதுரவாயல் பிள்ளையார் கோவில் பகுதியில் ஆய்வு செய்தார். குடிநீர் தொட்டிகள், வீடுகளில் சேகரித்து வைத்திருந்த குடிநீரை பார்வையிட்டார். தண்ணீர் தேங்கியுள்ள பகுதியில் கொசு உற்பத்தி ஆவதை பார்த்து அதனை சரிசெய்ய உடனடி நடவடிக்கை மேற்கொண்டார்.

## வேதாரண்யம் சென்னைக்கு எக்ஸ்பிரஸ் ரெயில் இயக்க வலியுறுத்தல்

திருத்துறைப்பூண்டி, செப். 12
சென்னைக்கு அகல ரெயில் பாதை அமைத்தும் போக்குவரத்து இயக்கப்படவில்லை. இதனால் அவர்களுக்கு நேரமும், பணமும் அதிகமாக விரயமாகிறது.



திருத்துறைப்பூண்டி ரெயில் நிலையத்தை தென்னக ரெயில்வே கோட்ட மேலாளர் அன்பழகன் நேரில் பார்ர் ஆய்வு செய்தார். அவரிடம் திருவாரூர் மாவட்ட ரெயில் உபயோகிப்பாளர்கள் சங்க மாவட்ட தலைவர் வக்கீல் நாகராஜன், மாவட்ட செயலாளர் எடையூர் மணிமாறன் ஆகியோர் கோரிக்கை மனு அளித்தனர். அந்த மனுவில் கூறியிரு ப்பதாவது: திருத்துறைப்பூண்டி, வேதாரண்யத்தில் இருந்து வர்த்தகர்களும், வியாபாரிகளும் தொழில் நிமித்தமாகவும் மற்றும் பல்வேறு காரணங்களுக்காகவும் சென்னைக்கு அதிகமாக செல்ல வேண்டியுள்ளது. இந்நிலையில், வேதாரண்யம் மற்றும் திருத்து றைப்பூண்டி அகஸ்தி யம்பள்ளியில் இருந்து சென்னைக்கு அகல ரெயில் பாதை அமைத்தும் ரெயில் போக்குவரத்து இயக்கப்படவில்லை. எனவே, அப்பகுதி மக்களும், வணிகர்களும் சென்னை செல்ல வேண்டும் என்றால் அதிக கட்டணம் கொடுத்து பஸ்களில் தான் செல்ல வேண்டிய நிலை உள்ளது. இதனால் அவர்களுக்கு நேரமும், பணமும் அதிகமாக விரயமாகிறது. அகல ரெயில் பாதை அமைக்கப்பட்ட பின்பும் சென்னைக்கு ரெயில் போக்குவரத்து தொடங்கவில்லை என்பது பொது மக்களுக்கு மிகுந்த ஏமாற்றமாக உள்ளது. எனவே, பொதுமக்கள் நலன் கருதி உடனடியாக வேதாரண்யம் சென்னைக்கு திருத்துறைப்பூண்டி வழியாக எக்ஸ்பிரஸ் ரெயில் இயக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# மயிலாடுதுறை வதான்யேஸ்வரர் கோவில் கும்பாபிஷேக விழா




தரங்கம்பாடி, செப். 12

புனிதநீர் அடங்கிய கடங்கள் யாகசாலையில் இருந்து புறப்பட்டு கோபுரத்தை வந்தடைந்தது. ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

மயிலாடுதுறையில் குரு பரிகாரதலமாக விளங்கும் ஞானாம்பிகை உடனாகிய வதான்யேஸ்வரர்கோவில் அமைந்துள்ளது. தருமபுரம் ஆதீனத்திற்கு சொந்தமான இக்கோவிலில் ரிஷப தேவரின் கர்வத்தை அடக்கி தட்சிணாமூர்த்தி யாகசிவபெருமான்காட்சி தந்த பெருமைக்குரிய தலம். வேறெங்கும் இல்லாதவாறு நந்தியின் மேல் ஸ்ரீமேதா தட்சிணாமூர்த்தி எழுந்தருளி காட்சி அளிக்கிறார். ஐந்து நிலை ராஜ கோபுரங்கள் கொண்ட இக்கோயில் 19 ஆண்டுகளுக்குப்பிறகு புனரமைக்கப்பட்டு நேற்று மகா கும்பாபிஷேகப் பெருவிழா நடைபெற்றது. கும்பாபிஷேகத்தை முன்னிட்டு பூர்வாங்க பூஜைகள் கடந்த 3ம்தேதி தொடங்கி 8 கால யாக சாலை பூஜைகள் நடைபெற்றது. தருமபுர ஆதீனம் 24வது குருமகா சன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ கையிலை மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் முன்னிலையில் நடைபெற்றது. இக்கோவில் தலைமை குருக்கள் பாலச்சந்திர தலைமையில் வேதா விற்பனர்கள் 8ம் கால யாகசாலை பூஜையில் ஹோமங்கள், மகா பூரணாகுதி மகாதீபாரதனை செய்யப்பட்டு பூஜைகள் நிறைவடைந்தது. மங்கல வாத்தியங்கள் முழங்க புனித நீர் அடங்கிய கடங்கள் யாகசாலையில் இருந்து புறப்பட்டு ஆலயத்தை வலம் வந்து விமானத்தில் உள்ள கோபுரத்தை வந்து அடைந்தது. சுவாமி கருவறைக்கு மேல் தங்க கலசம், அம்பாள் ராஜகோபுரங்கள் உள்ளிட்ட அனைத்து கோபுர கலசங்களுக்கும், மேதா தட்சிணாமூர்த்தி தங்க கலசம் ஆகியவற்றிற்கு ஒரே நேரத்தில் மந்திரங்கள் ஓத புனிதநீர் ஊற்றி மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது. கும்பாபிஷே கத்தில் மதுரை ஆதீன மடாதிபதி, சூரியனார் கோயில் ஆதீன மடாதிபதி, துழாவூர் ஆதீன மடாதிபதி, மாவட்ட கலெக்டர் மகா பாரதி, மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு மீனா மற்றும் அயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

# கோர்ட்டு அவமதிப்பு வழக்கு: ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் 2 பேர் மதுரை ஐகோர்ட்டில் ஆஜர்

மதுரை, செப். 12

கோர்ட்டு உத்தரவை செயல்படுத்தாத கல்வித்துறை ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் காக்கர்லா உஷா, நந்தகுமார் ஆகியோர் ஆஜராகும்படி ஐகோர்ட்டு உத்தரவிட்டது. ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் காக்கர்லா உஷா, நந்தகுமார் ஆகியோரை சென்னை போலீசார் அழைத்து வந்து மதுரை கோர்ட்டில் ஆஜர் படுத்தி உள்ளனர்.

பள்ளிக்கல்வித்துறையில் பணியாற்றிய சிலர் தங்களது கோரிக்கைகளுக்காக மதுரை ஐகோர்ட்டில் வழக்கு தாக்கல் செய்தனர்.

இந்த வழக்கை விசாரித்த மதுரை ஐகோர்ட்டு பிறப்பித்த உத்தரவை அதிகாரிகள் முறையாக செயல்படுத்தவில்லை என்று கூறி கடந்த 2016 ஆம் ஆண்டில் கோர்ட்டு அவமதிப்பு வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கு தொடர்ந்து நிலுவையில் இருந்து வந்தது.

இந்த நிலையில் கோர்ட்டு உத்தரவை செயல்படுத்தாத கல்வித்துறை ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் காக்கர்லா உஷா, நந்தகுமார் ஆகியோர் ஆஜராகும்படி ஐகோர்ட்டு உத்தரவிட்டது.

ஆனால் அவர்கள் ஆஜராகவில்லை.

இதையடுத்து அவர்களை கைது செய்து ஆஜர்படுத்தும்படி சென்னை மாநகர போலீஸ் கமிஷனருக்கு ஐகோர்ட்டு உத்தரவிட்டது. அதன்படி அந்த வழக்கு விசாரணைக்கு வருகிறது. முன்னதாக ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் காக்கர்லா உஷா, நந்தகுமார் ஆகியோரை சென்னை போலீசார் அழைத்து வந்து மதுரை கோர்ட்டில் ஆஜர்படுத்தி உள்ளனர்.

# 30 பள்ளி குழந்தைகளை ஏற்றி சென்ற வேன் கவிழ்ந்து விபத்து



திருச்சி, செப். 13

திருச்சி சோமரசம்பேட்டையில் 30 பள்ளி குழந்தைகளை ஏற்றி சென்ற வேன் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதுகுழந்தைகளை மீட்டு தனியார் மருத்துவமனைகளுக்கு பொதுமக்கள் கொண்டு சென்றனர்

ராம்ஜிநகர், திருச்சி சோமரசம்பேட்டையில் தனியார் பள்ளி இயங்கி வருகிறது. இப்பள்ளியில் பயிலும் மாணவர்களை அழைத்து வருவதற்காக, பள்ளியில் வேன் இயக்கப்பட்டு வருகிறது. இந்த வேன் பழுதடைந்த காரணத்தால், இன்று பள்ளி மாணவ, மாணவிகளை அழைத்து வருவதற்காக தனியார் வேன் ஒன்று வாடகைக்கு பேசப்பட்டு உள்ளது. இந்த வேனை இனம்புலியூரை சேர்ந்த டிரைவர் சங்கர்(வயது 21) என்பவர் ஓட்டி சென்றுள்ளார். பள்ளக்காடு பகுதியில் உள்ள 30 பள்ளி மாணவ, மாணவிகளை வேனில் ஏற்றிக்கொண்டு அவர் பள்ளியை நோக்கி வேனை ஓட்டி சென்றுள்ளார்.

பள்ளக்காடு பகுதியை அடுத்து வேன் வந்து கொண்டிருந்தது. வயல் வெளி பகுதி என்பதால் சாலையின் இருபுறமும் சுமார் 3 அடி அளவிற்கு பள்ளம் இருந்துள்ளது. அப்போது எதிர்பாராத விதமாக எதிரே இருசக்கர வாகனத்தில் வந்த இருவர் மீது வேன் மோதி உள்ளது. இதில் வேன் கட்டுப்பாட்டைஇழந்துகவிழ்ந்து விபத்துக்குள்ளானது. வேனில் இருந்த பள்ளி குழந்தை அலறல் சத்தம் கேட்டு அப்பகுதியில் சென்றவர்கள் உடனடியாக விபத்து நடந்த இடத்திற்கு வந்து பள்ளி குழந்தைகளை மீட்டனர். லேசான காயம் அடைந்த குழந்தைகளை இருசக்கர வாகனங்கள் மூலம்அருகில் உள்ள மருத்துவமனைக்கு அழைத்துசென்றுசிகிச்சை அளித்துள்ளனர்.

இதில் 2 பள்ளி குழந்தைகளுக்கு காயம் ஏற்பட்டுள்ளது. அவர்கள் ஆம்புலன்ஸ் மூலம் சோமரசம்பேட்டை தனியார் மருத்துவனைக்கு அழைத்து செல்லப்பட்டு சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டு உள்ளனர். பள்ளி வேன் மோதியதில் காயடைந்த இருசக்கர வாகனத்தில் வந்தவர்கள் திருச்சி அரசு மருத்துவமனைக்கு அழைத்து செல்லப்பட்டனர். விபத்து குறித்து சோமரசம்பேட்டை போலீசார் வழக்குபதிந்துவிசாரணை நடத்தி வருகின்றனர்.

# கிளாம்பாக்கம் புதிய பஸ் நிலையம் தீபாவளிக்கு முன்பு திறக்கப்படுகிறது கால்வாய் அமைக்கும் பணி தொடங்கியது

வண்டலூர், செப். 12

ஜி.எஸ்.டி. சாலை பகுதியில் புதிதாக கால்வாய் மற்றும் கல்வெட்டு அமைப்பதற்கான பணிகளை ரூ.17 கோடியில் செயல்படுத்த திட்டமிடப்பட்டது. பலத்த மழைபெய்தாலும் வரும் காலங்களில் தண்ணீர் பஸ்நிலைய பகுதியில் தேங்காமல் செல்லும்.

சென்னையில் அதிகரித்து வரும் வாகனங்கள் மற்றும் போக்குவரத்து நெரிசலை கருத்தில் கொண்டு வண்டலூரை அடுத்த கிளாம்பாக்கத்தில் ஜி.எஸ்.டி சாலையையொட்டி புதிய பஸ்நிலையம் அமைக்கப்பட்டு வருகிறது. ரூ.394 கோடி செலவில் ரூ.88.50 ஏக்கர் பரப்பளவில் நவீன வசதிகளுடன் இந்த பஸ்நிலையம் அமைய உள்ளது. இங்கு 90 சதவீதத்துக்கு மேல் பணிகள் முடிந்து திறப்பு விழாவுக்கு தயார்நிலையில் உள்ளது. இந்த புதிய பஸ் நிலையத்துக்கு கலைஞர் நூற்றாண்டு பஸ் நிலையம் என்று பெயரிடப்பட்டு உள்ளது.விரைவில் திறப்பு விழாவுக்கு தயாராகி வருகிறது. இந்நிலையில் சமீபத்தில் பெய்த பலத்த மழையின் போது பஸ் நிலையத்தின் முன்பகுதியில் முழங்கால் அளவுக்கு மேல் தண்ணீர் தேங்கியது. மேலும்



அப்பகுதியில் பலமணி நேரம் கடும் போக்குவரத்து நெரிசலும் ஏற்பட்டது. இதைத்தொடர்ந்து இந்த மழைநீர் பிரச்சினைக்கு நிரந்தர முடிவு செய்த பின்னரே கிளாம்பாக்கம் பஸ்நிலையத்தை பயன்பாட்டுக்கு கொண்டு வர அரசு முடிவு செய்து உள்ளது. கிளாம்பாக்கம் புதிய பஸ்நிலையம் அமைந்துள்ள இடம் உயரமாகவும், ஜி.எஸ். டி.சாலை மிக தாழ்வாகவும்இருப்பதால் மழை பெய்யும் போது அதிகஅளவு தண்ணீர் தேங்க காரணமாக உள்ளது. இதைத் தொடர்ந்து ஜி.எஸ்.டி. சாலை பகுதியில் புதிதாக கால்வாய் மற்றும் கல்வெட்டு அமைப்பதற்கான பணிகளை ரூ.17 கோடியில் செயல்படுத்த திட்டமிடப்பட்டது. அதன்படி தற்போது கிளாம்பாக்கம் பஸ்நிலையத்தின் முன்பகுதியில் ஜி.எஸ்.டி.சாலையைஒட்டி மழைநீர்கால்வாய் அமைக்கும் பணி நேற்று தொடங்கியது. இதில் தண்ணீர் அதிக அளவு செல்லும் வகையில் பெரிய கான்கிரீட் குழாய் அமைக்கப்பட இருக்கிறது. இதன்காரணமாக பலத்த மழைபெய்தாலும் வரும் காலங்களில் தண்ணீர் பஸ்நிலைய பகுதியில் தேங்காமல் செல்லும். தற்போது பஸ்நிலையத்தின் மேற்கு பகுதியில் திருச்சியில் இருந்து சென்னை நோக்கி வரும் வாகனங்கள் பகுதியில் சாலையை ஒட்டி நடைபெற்று வருகின்றன. இதற்காக அங்கு பள்ளம் தோண்டும் பணிகள் நடைபெற்று வருகிறது. சுமார் 3 மீட்டர் அகலம் மற்றும் 1.5 மீட்டர் அகலத்தில் கால்வாய் அமைக்கப்பட இருக்கிறது. இந்த இடத்தில் பணி முடிந்ததும் அடுத்ததாக சென்னையில் இருந்து செங்கல்பட்டு நோக்கி செல்லும் சாலையில் கிழக்கு பக்கம் பணிகள் தொடங்க உள்ளது. கால்வாய்அமைக்கும்பணியை 4 வாரத்திற்குள் முடிக்க அதிகாரிகள் திட்டமிட்டு உள்ளனர். மேலும் கிளாம்பாக்கம் பஸ்நிலையத்தை தீபாவளிக்கு முன்னதாக திறக்க முடிவு செய்யப்பட்டு உள்ளது. இதையொட்டி கால்வாய் பணி தீவிரப்படுத்தப்பட்டு இருக்கிறது. இது குறித்து அதிகாரி ஒருவர் கூறும்போது, கிளாம்பாக்கம் புதிய பஸ்நிலையத்தில் பெரும்பாலான பணிகள் முடிந்துதிறப்புவிழாவுக்கு தயாராக உள்ளது. ஆனால் மழையின் போது பஸ்நிலையத்தின் முன்பு தண்ணீர் தேங்கியதாலும் தேசிய நெடுஞ்சாலைகளில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டதாலும், மழைநீர்வடிகால் ஏற்பாடுகளை செய்து முடித்த பின்னர் பஸ் நிலையத்தை திறக்க அரசு முடிவு செய்தது. தற்போது கால்வாய் அமைக்கும் பணி தொடங்கி உள்ளது. இதனை விரைந்து முடிக்க உத்தரவிடப்பட்டு உள்ளது. தீபாவளிக்கு முன்பு கிளாம்பாக்கம் பஸ்நிலையத்தை திறக்க அனைத்து ஏற்பாடுகளும் நடந்து வருகின்றன என்றார்.

# வளர்ச்சி திட்ட பணிகளை கலெக்டர் ஆய்வு



தஞ்சாவூர், செப். 12

அரசு நெல் கொள்முதல் நிலையத்திற்கு நிரந்தர கட்டிடம் கட்டித்தர வேண்டும். வாய்க்காலில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும். மெலட்டூர்: தஞ்சாவூர் மாவட்டம், அம்மாபேட்டை ஒன்றியம், திருக்கருகாவூர், இடையிருப்பு ஊராட்சியில் இடையிருப்பு ஊராட்சியில் குடிநீர் மேல்நிலை நீர்தேக்க தொட்டி புதுப்பிக்கும் பணி, ஜல்ஜுவன் திட்டப்பணிகள், சிறு பாலம் கட்டுமானப்பணி மற்றும் சாலைப்பணிகள் ஆகியவற்றை மாவட்ட ஆட்சித்தலைவர் பார்வையிட்டு பணிகள் தரமாக செய்யப்படுகிறது என தஞ்சை மாவட்ட கலெக்டர் தீபக் ஜேக்கப் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். அப்போது இடையி ருப்பு அரசு நெல் கொள்முதல்நிலையத்திற்கு நிரந்தரகட்டிடம் கட்டித் தரவும் வாய்க்காலில் உள்ள ஆக்கிரமிப்பு களை அகற்றிட வேண்டும் என விவசாயிகள் மாவட்ட ஆட்சியரிடம் கோரிக்கை விடுத்தனர். இந்த ஆய்வின் போது பாபநாசம் தாசில்தார் பூங்கொடி, அம்மாபேட்டை வட்டார வளர்ச்சி அலுவலர்கள்கூத்தரசன், அமானுல்லா இடையிருப்பு ஊராட்சி மன்ற தலைவர் வனிதா கார்த்திகேயன், மற்றும் ஊராட்சி செயலாளர் ராஜா உள்பட பலர் உடன் இருந்தனர்.

# லிஸ்ட் ரெடி.. 1 கோடி பேருக்கு மகளிர் உரிமைத் தொகை

சென்னை, செப்.12

ஒரு கோடிக்கும் மேற்பட்ட மகளிர்பயன்பெறும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தை செயல்படுத்துவது குறித்த ஆய்வுக் கூட்டம் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கூறியிருப்பதவாது: கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் தொடக்க விழாவானது வருகிற 15 ஆம் நாள் காஞ்சிபுரத்தில் நடைபெற இருக்கிறது. அன்றைய தினமே அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும் அமைச்சர்கள் முன்னிலையிலும் நடைபெற இருக்கிறது. தமிழ்நாடு அரசின் மிகப் பெரிய திட்டம் என்றால் இதுதான். ஒரே நேரத்தில் ஒருகோடிக்கும் மேற்பட்ட பெண்கள் ஆயிரம் ரூபாயை மாதாமாதம் ஆண்டு தோறும் பெறப் போகிறார்கள். அதிகப்படியான நிதி ஒதுக்கீடு தேவைப்படும் திட்டமாகவும் அதிகப்படியான பயனாளிகள் உள்ளடக்கிய திட்டமாகவும் இது அமைந்துள்ளது. இதனை வெற்றிகரமாக நடத்திக் காட்டும் பொறுப்பும் கடமையும் அதிகாரிகளாகிய உங்களுக்கு இருக்கிறது. ஒரு கோடிக்கும் மேற்பட்டவர்கள் பயன்பெறுகிறார்கள் என்பதால் கிடைக்கின்ற பாராட்டு, ஒரு கோடி பாராட்டுகளுக்கு சமம். அதேபோல் தான் சிறு தவறு நடந்துவிட்டால் அதனால் கிடைக்கும் கெட்டபெயரும், என்பதை யாரும் மறந்து விடக் கூடாது. எனவே எந்த இடத்திலும் எந்தச் சூழலிலும் எந்த ஒரு தனிநபருக்கும் சிறு தவறு கூட நடந்துவிடக்கூடாது என்பதில் கவனமாக இருக்க வேண்டும் என்று நான் தொடர்ந்து சொல்லி வருவதை, தற்போதும் நினைவுபடுத்த விரும்புகிறேன். தகுதி வாய்ந்த பெண்களுக்கு உரிமைத் தொகை அவர்களது வங்கிக் கணக்கில் வரும் செப்டம்பர் 15 முதல் கிடைக்கும் வகையில் நாம் ஏற்பாடு செய்துள்ளோம். இத்தகைய தகுதி பெற்ற குடும்பத் தலைவிகள் அனைவருக்கும் மாதம் தோறும் வங்கிகளில் அவர்களது கணக்கில் உரிமைத் தொகை வரவு வைக்கப்படும். ஏ.டி.எம். கார்டுகள் முதற்கட்டமாக குறிப்பிட்ட எண்ணிக்கையிலும், படிப்படியாக விரைவில் அனைவருக்கும் வழங்கப்பட வேண்டும். ஆனால் ஏ.டி.எம். கார்டு வழங்கப்படுவதற்காக காத்திருக்காமல், தேர்ந்தெடுக்கப்பட்ட அனைவருக்கும் உரிமைத் தொகை வழங்கப்படும். பயனாளிகளுக்கு பணத்தை எடுப்பதில் எந்த சிக்கலும் ஏற்படக் கூடாது, அதிலும்கவனமாகஇருக்க வேண்டும். அதேபோல், வரும் 15ஆம் தேதி, என்னுடைய சார்பில் மகளிருக்கு அனுப்பி வைக்கப்படும் குறுஞ்செய்தியில், பணம் எடுப்பது தொடர்பாக ஏதேனும் பிரச்சினைகள் இருந்தால், அதுகுறித்து தகவல் தெரிவிக்க வேண்டிய Toll Free எண்ணும் சேர்க்கப்பட வேண்டும். இந்த திட்டத்தில் இணைந்து கொள்ள 1 கோடியே 63 லட்சம் விண்ணப்பங்கள் அரசுக்கு வந்துள்ளன. தகுதியுள்ளவர்கள் என நாம் தேர்ந்தெடுத்துள்ளது 1 கோடியே 6 லட்சத்து 50 ஆயிரம் பேர். அப்படியானால் மற்றவர்களது கோரிக்கைகள் ஏன் ஏற்கப்படவில்லை என்பதை நாம் அவர்களுக்குச் சொல்லியாக வேண்டும். எந்த அடிப்படையில் உங்களது கோரிக்கையை எங்களால் ஏற்க முடியவில்லை என்பதற்கான காரணத்தை குறிப்பிட்டு அவர்களுக்கு குறுஞ்செய்தி அனுப்பியாக வேண்டும். அப்படி அனுப்பினால் பெரும்பாலானவர்கள் மனநிறைவு அடைவார்கள். சிலருக்கு சந்தேகங்கள் இருக்கலாம் மறுபடியும் நம்மிடம் விண்ணப்பிப்பார்கள். அவர்களுக்கும் அத்தகைய வாய்ப்பை நாம் வழங்க வேண்டும். வாய்ப்பை வழங்கினால் பொதுமக்களுக்கு அரசின் மீது மிகுந்த நம்பிக்கை ஏற்படும். வருகிற 15ஆம் நாள் அன்று மாவட்டத் தலைநகரங்களில் இதற்கான விழா நடக்க இருக்கிறது. பணம் கிடைத்தவர்கள் மகிழ்ச்சியாக வருவார்கள். பணம் கிடைக்காத மகளிர் யாராவது அந்த இடத்துக்கு வந்து கேட்டால், பதில் சொல்வதற்கான ஏற்பாடு செய்யப்பட வேண்டும். தனியாக இதற்கென அலுவலர்களை உட்கார வைத்து, இப்படி கேட்க வரும் மகளிரிடம் கோரிக்கை மனுக்களை வாங்கி, 'நாங்கள் பரிசீலிக்கிறோம்' என்பதைச் சொல்லி அனுப்பி வைக்க வேண்டும். இது மிகமிக முக்கியமாகும். இதைச் செய்யாவிட்டால், ஏதாவது ஒரு இடத்தில் பிரச்சினை என்றாலும், அது மாநிலம் முழுவதும் பெரிய செய்தியாக மாறிவிடும். அதனால் கவனமாக இருக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். மாவட்ட ஆட்சியர்கள் அனைவருக்கும், இந்த திட்டத்தை தொடர்ந்து கண்காணிக்க வேண்டும் என்று தலைமைச் செயலாளர் அறிவுறுத்துமாறும் கேட்டுக் கொள்கிறேன். அரசுக்கும் வங்கிகளுக்கும் வங்கிகளுக்கும் பொதுமக்களுக்குமான தொடர்பு சீராக அமைந்து வருகிறதா என்பதை மாதம் தோறும் கண்காணிக்க வேண்டும். மாதத்தில் முதல் ஒருவார காலம்இந்ததிட்டத்துக்காக தனிக் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஆண்டுக்கு 12 ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யும் மாபெரும் திட்டம் இது. ஒருகோடிக்கும்மேற்பட்ட மகளிர் மாதம் தோறும் பயனடையும் திட்டம் இது. எனவே, இத்திட்டம் குறித்து தொடர்ந்து நாம் மக்களிடம் எடுத்துச் சொல்லி வர வேண்டும். ★ மகளிருக்கு கட்டணமில்லாவிடியல் பயணம் ★ முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் ★ புதுமைப் பெண் திட்டம் மூலம் மாணவியருக்கு 1000 ரூபாய் ★ இளைஞர்களுக்கு நான் முதல்வன் திட்டம் ★ மகளிருக்கு மாதம் தோறும் 1000 ரூபாய் கலைஞர் உரிமைத் திட்டம் ஆகிய 5 திட்டங்களைப் பற்றியும் திரும்பத் திரும்ப மக்களிடம் எடுத்துச் சென்று கொண்டே இருக்க வேண்டும். எந்த ஒரு திட்டமாக இருந்தாலும், அதனை முறையாகச் செயல்படுத்தினாலே, அதனால் பயனடைந்தவர்கள் மிகப்பெரிய அளவுக்கு நம்மைப் பாராட்டி பேசுவார்கள். அத்தகைய பாராட்டுகளை மட்டுமே பெற்றுத்தரும் திட்டமாக கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தை செயல்படுத்திக் காட்ட வேண்டும் என்று உங்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு அவர்கூறினார் இக்கூட்டத்தில், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, முதலமைச்சரின் கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் வளர்ச்சி ஆணையர் நா. முருகானந்தம், நிதித்துறை முதன்மைச் செயலாளர் உதயச்சந்திரன், சிறப்பு திட்ட செயலாக்கத் துறை செயலாளர் தாரேஸ் அகமது, கலைஞர் மகளிர் உரிமைத் திட்ட சிறப்புப் பணி அலுவலர் இளம்பகவத், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# 15 அடி நீளத்துக்கு பென்சில் ஊக்கில் செயின்: தர்மபுரி வாலிபர் கின்னஸ் சாதனை

தர்மபுரி, செப். 12

தர்மபுரி, பேட்டையைச் சேர்த்தவர் டிப்ளமோ பட்டதாரி கவி யரசன், 23. இவர், தன் தொடர்முயற்சியால் பென் சில் ஊக்கில், 13 அடி நீளத்துக்கு செயின் அமைத்து, கின்னஸ் சாதனை படைத்துள்ளார்.

இதுகுறித்து, அவர் கூறியதாவது:

என் தந்தை செல்வம் தையல் தொழிலாளி. தாய் மஞ்சுளா இல்லத்தரசி. சாதாரண குடும்பத்தைச் சேர்ந்த எனக்கு, சிறு வயதில் இருந்து சிற்பக் கலை மீது ஆர்வம் ஏற்பட்டது. சிறுவயதில் யாருடைய கற்பித்தலும் இன்றி விநாயகர் சிலை செய்தேன். வயது அதிகரிக்க, என்னுள் இருந்த சிற்பக் கலை மீதான ஆர்வமும் அதிகரித்தது.

நானே என் தொடர் முயற்சியாலும், பெற்றோரின் ஊக்கத்தாலும் சாக்பீஸில் சிற்பங்கள் செய்வதை கற்றுக் கொண்டேன். சோழர்கால சிற்பங்



களை, சாக்பீஸில் செய்து வந்தேன். என் உருவாக்கத்துக்கு அங்கீகாரம் பெறும் முயற்சியை, சமூக வலை தளங்களில் தேடினேன். அதில் கிடைத்த தகவல் வாயிலாக, சாக்பீஸில் மிகச்சிறிய அளவில் புத்தர் சிலை செய்தேன். இதற்காக எனக்கு 2019ல், 'ஆசியான் விருது! கிடைத்தது, என்னை மேலும் ஊக்கப்படுத்தியது. இதற்கு, தர்மபுரி மாவட்ட அப்போதைய கலெக்டர் மலர் விழி எனக்கு அறிவுரை வழங்கினார்.

தொடர்ந்து, சாக்பீஸில் சிறிய அளவில் முரு கன் சிலை செய்ததற்கு, 2021ல், 'இந்தியன் புக் ஆப் ரெக்கார்டு' விருது கிடைத்தது. இதுவே, என்னைகின்னஸ்சாதனை படைக்க வேண்டும் என்ற எண்ணத்தை தூண்டியது. இதையடுத்து, பென்சில் ஊக்கில், 15 அடி நீளத் துக்கு செயின் அமைக்க முடிவு செய்தேன்.

என் முயற் சிக்கு பெங்களூரை சேர்ந்த அருனாசலம், காஞ்சிபுரத்தை சேர்ந்த காளத்தி, இன்பா டிரஸ்ட், தர்மபுகி கலெக் டர் சாந்தி, தணிக்கைதுறைஉதவி இயக்குனர் லோகதாதன், உதவியா ளர் ராஜா மற்றும் இன்பா டிரஸ்ட் ஆகியோர் உறுதுணையாக இருந்தனர்.

தர்மபுரி கலெக்டர்அலுவலகத்தில் இடம் ஒதுக்கி கொடுத்தனர்.

நாள் ஒன்றுக்கு 18 மணி நேரம் என 10 நாட்களில் 15 அடிக்கு பென்சில் ஊக்கில் செயின் அமைக்கும் பணியை ஜன., 18ல் துவங்கி, 28ல் முடித்தேன். இதேபோன்ற போட்டியில், உலகத்தில் பலர் பங்கேற்ற நிலையில், குறைந்த நேரத்தில், 15 அடி நீளத்துக்கு செயின் அமைத்ததையடுத்து, கடந்தஞாயிற்றுக்கிழமை, என் படைப்பை அங்கீகரித்து, கின்னஸ் ரிக்கார்டு



நிறுவனம் எனக்கு சான்றிதழ் வழங்கியது.

இதன் வாயிலாக, என் சாதனை கனவில் அடி எடுத்து வைத்துள்ளேன். கின்னஸ்சாதனைபடைத்த எனக்கு, அரசு அங்கீகா ரம் வழங்காமல் உள்ளது ஏமாற்றம் அளிக்கிறது.

மத்திய, மாநில அரசுகள் எனக்கு அரசு வேலை வழங்கினால், மேலும் பல்வேறு சாதனைகள் படைக்க முடியும். இவ்வாறு அவர் கூறினார்.

இதில் சென்னை முன்னாள் மேயர் சைதை துரைசாமி அவர்கள் சிறந்த மனிதநேயத்திற்கான சான்றிதழை அளித்தார்கள்

Title-Code:-TNTAM24615
R.Dis No:- 968/2023 12.09.2023

# திரைப்பிரபலங்கள் வெளியிட்ட 'மூன்றாம் கண்' திரைப்படத்தின் போஸ்டர்



அறிமுக இயக்குனர் சசோ கணேசன் இயக்கத்தில் உருவாகி வரும் திரைப்படம் 'மூன்றாம் கண்'. இந்த படத்தில் விதார்த், கலையரசன், த்ரிகுண், சந்தோஷ் பிரதாப், ஜான்விஜய், தேஜுஅஸ்வினி, அதுல்யாசந்திரா, ஸ்வேதா டோரத்தி, சுந்தரா டிராவல்ஸ் ராதா ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்கின்றனர். மூன்றாம் கண் போஸ்டர் ட்ரெண்டிங் எண்டர்டெயின்மெண்ட் மற்றும் ஒயிட் ஹார்ஸ் ஸ்டுடியோஸ் (*Trending entertainment & White horse studios*) சார்பில் கே. சசிகுமார் தயாரிக்கும் இப்படத்திற்கு அஜீஸ் இசையமைக்க என். எஸ். உதயகுமார் ஒளிப்பதிவு செய்கிறார். ஹைப்பர்லிங்க் கிரைம் திரில்லராக உருவாகவுள்ளது. 'மூன்றாம் கண்' திரைப்படத்தின் இறுதிக்கட்ட படப்பிடிப்பு பரபரப்பாக நடைபெற்று வரும் நிலையில், இப்படத்தின் ஃபர்ஸ்ட் லுக் போஸ்டர் வெளியாகியுள்ளது. இந்த போஸ்டரை இயக்குனர் கவுதம் மேனன், நடிகர் ஆர்யா, நடிகை ஐஸ்வர்யா ராஜேஷ் ஆகியோர் வெளியிட்டனர். இந்த போஸ்டரில் கதையின் கதாப்பாத்திரங்கள் மேல் நோக்கி ஆர்வத்துடன் பார்க்க, அவர்கள் ஒரு கேள்விக்குறி போன்று, காட்சியளிக்கிறார்கள். மிக வித்தியாசமானதாக அமைந்துள்ள இந்த போஸ்டர் ரசிகர்களிடம் வரவேற்பைப் பெற்று வருகிறது.






# உங்கள் குறைகள் நிவர்த்தி செய்யப்படும்.. ரசிகர்களுக்கு வேண்டுகோள் விடுத்த ஏ.ஆர்.ரகுமான்

தமிழ் திரையுலகின் முன்னணி இசையமைப்பாளரான ஏ.ஆர்.ரகுமானின் 'மறக்குமாநெஞ்சம்' இசைநிகழ்ச்சியை சென்னை பனையூரில் ஆகஸ்ட் 12ம் தேதி நடத்த திட்டமிடப்பட்டு இருந்தது. ஆனால் மழையின் காரணமாக இந்த நிகழ்ச்சி ரத்து செய்யப்பட்டது. இதையடுத்து இந்த நிகழ்ச்சி செப்டம்பர் 10ஆம் தேதி நடைபெறும் என்றும் முன்பு ரசிகர்கள் வாங்கிய டிக்கெட் செல்லுபடியாகும் என்றும் ஏ.ஆர்.ரகுமான் அறிவித்திருந்தார். இதையடுத்து சென்னை கிழக்கு கடற்கரை சாலையில் நேற்று இந்த இசை நிகழ்ச்சி நடைபெற்றது. 25 ஆயிரம் பேர் கலந்து கொள்ளும் இந்த நிகழ்ச்சியில் 50 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டதால் தள்ளு முள்ளு ஏற்பட்டது. அதுமட்டுமல்லாமல் அடிப்படை வசதி எதுவும் இல்லாமல் ரசிகர்கள் சிரமப்பட்டனர். இதையடுத்து ஏ.ஆர்.ரகுமான் இசை நிகழ்ச்சியில் அளவுக்கு அதிகமான கூட்டம் அனுமதிக்கப்பட்டதா? என விசாரிக்க தாம்பரம் காவல் ஆணையர் உத்தவிட்டுள்ளார். இந்நிலையில், ரசிகர்களுக்கு ஏ.ஆர்.ரகுமான் வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளார். அதாவது, "அன்புள்ள சென்னை மக்களே, இசை நிகழ்ச்சிக்கு டிக்கெட் வாங்கி துரதிர்ஷ்டவசமான சூழ்நிலைகளால் மைதானத்திற்குள் நுழைய முடியாமல் போனவர்கள், தயவு செய்து உங்கள் டிக்கெட் வாங்கிய நகலை arr4chennai@btos.in என்ற மின்னஞ்சலுக்கு உங்கள் குறைகளுடன் பகிர்ந்து கொள்ளவும். உங்கள் குறைகளை எங்கள் குழு விரைவில் நிவர்த்தி செய்யும் " என்று சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார். இதற்கு முன்பு இசை நிகழ்ச்சியில் ரசிகர்கள் பங்கேற்க முடியாமல் வீடு திரும்பியதற்கு நாங்களே பொறுப்பேற்று கொள்கிறோம் என்று நிகழ்ச்சி ஏற்பாட்டு நிறுவனம் தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

# ரஜினி சாரின் ஈர்ப்பு நட்டியிடம் இருந்தது விஜய்சேதுபதி புகழாரம்



தென்னிந்திய திரையுலகின் முன்னணி நடிகரான விஜய் சேதுபதியின் 50வது படமான 'மகாராஜா' திரைப்படத்தை 'குரங்கு பொம்மை' படத்தை இயக்கி பிரபலமடைந்த இயக்குனர் நித்திலன் சுவாமிநாதன் இயக்குகிறார். இப்படத்தில் நட்டி (எ) நட்ராஜ் சுப்ரமணியம், முனீஷ்காந்த், அருள்தாஸ், பாய்ஸ் மணிகண்டன் மற்றும் பலர் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கின்றனர். பேஷன் ஸ்டுடியோஸ் சுதன் சுந்தரம் மற்றும் தி ரூட் ஜெகதீஷ் பழனிசாமி இணைந்து தயாரித்துள்ள இப்படத்திற்கு அஜனீஷ் லோக்நாத் இசையமைத்துள்ளார்.




தினேஷ் புருஷோத்தமன் ஒளிப்பதி செய்துள்ளார். இப்படத்தின் ஃபர்ஸ்ட்லுக் போஸ்டர் வெளியீட்டு விழா சென்னையில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் நடிகர் விஜய் சேதுபதி பேசியதாவது, என்னை திட்டியும் வாழ்த்தியும் இந்த உயரத்திற்கு கொண்டு வந்த ரசிகர்களுக்கும் ஊடகங்களுக்கும் என்னுடைய நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். பொறுமையும் அனுபவமும் ஒரு மனிதனை அடுத்த நிலைக்கு எடுத்துச் செல்லும். அத்தகைய அற்புதமான அனுபவத்தை கொடுத்த என் இயக்குனர்களுக்கும் ரசிகர்களுக்கும் நன்றி. இந்த படம் உங்களுக்கு பிடித்தது போல வந்திருக்கிறது. ஐம்பதாவது படம் என்பது நிச்சயம் என் சினிமா பயணத்தில் ஒரு மைல்கல். அது ஞானத்தையும் அனுபவத்தையும் கொடுத்திருக்கிறது. என் சினிமா வாழ்க்கையின் மிக முக்கிய புள்ளியை அருள் தாஸ் அண்ணன் வைத்துள்ளார். அவரைப் பார்த்ததும் பழைய நினைவுகள் மீண்டும் வந்துள்ளது. நட்டி சாரை பார்க்கும் பொழுது ரஜினி சாரின் அதே வேகம், ஈர்ப்பு அவரிடம் இருந்தது. பிலோமின், தினேஷ், அபிராமி, மம்தா என அனைவரும் தங்களது பணியை சிறப்பாக செய்துள்ளனர். நிதிலன் தயாரிப்பாளர்களின் பணத்தை எடுத்து தருவேன் என்று சொன்னது திமிர் கிடையாது, அவர் படத்தின் மீது வைத்துள்ள நம்பிக்கை. அந்த அளவுக்கு சிறப்பாக படம் வந்திருக்கிறது. பாய்ஸ் மணிகண்டன் அவரின் சமீபத்திய பேட்டி ஒன்று பார்த்தேன்.

மாடர்ன் சாமியார் போல அவ்வளவு நம்பிக்கையாக பேசியிருந்தார். அவர் இன்னும் நிறைய உயரம் அடைய வேண்டும். அனுராக் சாரின் தயாரிப்பில் நான் நடிப்பதாக இருந்தது. ஆனால், சில காரணங்களால் அது நடக்காமல் போனது. ஆனால் இந்த படத்திற்காக அவர் செய்த வேலை மிகப்பெரியது. நானும் அவரும் இணைந்து இன்னும் நிறைய படங்கள் பணிபுரிய வேண்டும் என விருப்பம்" என்றார்.

# விராட் கோலிக்கு வெள்ளி பேட்டை பரிசளித்த இலங்கை நெட் பவுலர் வைரலாகும் வீடியோ



ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டி பாகிஸ்தான் மற்றும் இலங்கையில் நடைபெற்று வருகிறது. சூப்பர் 4 சுற்று போட்டியில் இந்தியா பாகிஸ்தான் அணிகள் மோதின. இந்த ஆட்டம் மழையாள் நிறுத்தப்பட்டது. இதனை தொடர்ந்து மிதமுள்ள ஆட்டம் நடைபெற்றது. இந்த போட்டிக்கு முன்னர் வளர்ந்து வரும் இலங்கை கிரிக்கெட் வீரர்களுடன் தனது அனுபவத்தை விராட் கோலி பகிர்ந்துள்ளார். இதில் கிருஷாந்த் என்ற வீரர் விராட் கோலிக்கு வெள்ளி பேட்டை பரிசாக வழங்கியுள்ளார். இந்த வீடியோ தற்போது சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது. இலங்கை நெட் பவுலர் கூறியதாவது: நான் விராட் கோலியின் மிகப்பெரிய ரசிகர். அவரை கடைசியாக 2017 ல் நெட் பயிற்சியின் போது சந்தித்தேன். இந்த வெள்ளி பேட் அவருக்கு எனது சிறிய பரிசு. இந்தபேட்டில்இதுவரை அவர் அடித்த ஒவ்வொரு சதமும் அடங்கி யுள்ளது. இந்த பேட்டைதயார்செய்ய எனக்கு மூன்று மாதங்கள் எடுத்தது.

# பிரேசில் அணிக்காக அதிக கோல் பீலே சாதனையை முறியடித்தார் நெய்மர்

உலக கோப்பை கால்பந்து போட்டி 4 ஆண்டுக்கு ஒருமுறை நடைபெறுகிறது. கடந்த ஆண்டு கத்தாரில் நடந்த உலக கோப்பை போட்டியில் அர்ஜென்டினா சாம்பியன்பட்டம் பெற்றது. வரும் 2026ம் ஆண்டுக்கான உலக கோப்பை கால்பந்து போட்டியை அமெரிக்கா, கனடா, மெக்சிகோ ஆகிய 3 நாடுகள் இணைந்து நடத்துகிறது. இதற்கான தகுதிச்சுற்று ஆட்டங்கள் நடைபெற்று வருகிறது. இந்நிலையில், தென் அமெரிக்க கண்டத்தில் நடைபெற்ற தகுதிச்சுற்று ஆட்டம் ஒன்றில் பிரேசில், பொலிவியா அணிகள் மோதின. இதில் பிரேசில் 51 என்ற கோல் கணக்கில் அபார வெற்றி பெற்றது. இதில் நட்சத்திர வீரர் நெய்மர் 61 மற்றும் 93வது நிமிடத்தில் என 2 கோல்கள் அடித்தார். இதன்மூலம் பீலேயின் சாதனையை நெய்மர் முறியடித்தார். மறைந்த பிரேசில் கால்பந்து ஜாம்பவான் பீலே சர்வதேச போட்டிகளில் 77 கோல்கள் அடித்து இருந்தார். 1957 முதல் 1971 வரையிலான காலகட்டத்தில் 92 போட்டிகளில் இந்த கோல்களை அடித்தார். அவரது சாதனையை நெய்மர் ஏற்கனவே சமன் செய்தார். தற்போது அடித்த 2 கோல்கள் மூலம் பீலேயின் சாதனையை அவர் முறியடித்தார். 31 வயதான நெய்மர் 125 சர்வதேச போட்டியில் விளையாடி 79 கோல்கள் அடித்துள்ளார். இதன்மூலம் அதிக கோல்கள் அடித்துள்ள பிரேசில் வீரர் என்ற பெருமையை அவர் பெற்றுள்ளார். சர்வதேச அளவில் அதிக கோல்களை அடித்த வீரர்களில் நெய்மர் 9வது இடத்தில் உள்ளார். அவர் 2010 முதல் சர்வதேசபோட்டிகளில் ஆடி வருகிறார். கிறிஸ்டியானோ ரொனால்டோ (போர்ச்சுக்கல்) 123 கோல் அடித்து (200 போட்டி) முதல் இடத்தில் உள்ளார். மற்றொரு நட்சத்திர வீரரான லியோனல் மெஸ்சி (அமெரிக்கா) 103 கோல்களுடன் (175 ஆட்டம்) 3வது இடத்தில் உள்ளார்.

# அமெரிக்க ஓபன் டென்னிஸ் : சாம்பியன் பட்டம் வென்றார் ஜோகோவிச்



கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான அமெரிக்க ஓபன் டென்னிஸ் தொடர் நியூயார்க் நகரில் நடைபெற்றது. ஆண்கள் ஒற்றையர் பிரிவில் இறுதிப்போட்டி இன்று நடந்தது. இதில் செர்பியாவின் நோவக் ஜோகோவிச், ரஷிய வீரர் மெத்வதேவுடன் மோதினார். ஆரம்பம் முதலே ஜோகோவிச் அதிரடியாகஆடினார். முதல்செட்டை 63 எனஜோகோவிச் எளிதில்கைப்பற்றினார். இரண்டாவது செட்டில் மெத்வதேவ் பதிலடி கொடுக்கும் விதமாக ஆடினார். இதனால் ஜோகோவிச் 76 (75) என போராடி கைப்பற்றினார். மூன்றாவது செட்டை ஜோகோவிச் 63 என வென்றார். இறுதியில், ஜோகோவிச் 63, 76 (75), 63 என்ற செட் கணக்கில் வென்று சாம்பியன் பட்டம் வென்று அசத்தினார். இது ஜோகோவிச்சின் 24வது கிராண்ட்சிலாம் பட்டம் என்பது குறிப்பிடத்தக்கது.




தென் ஆப்பிரிக்காவுக்கு எதிரான 2வது ஒருநாள் போட்டியில் ஆஸ்திரேலியா வென்றது. ஒருநாள் கிரிக்கெட் தரவரிசையில் ஆஸ்திரேலியா மீண்டும் முதலிடத்தை எட்டியது.

தென் ஆப்பிரிக்கா சென்றுள்ள ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணி 5 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் பங்கேற்று விளையாடி வருகிறது.

ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் ஆஸ்திரேலியா 20 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது.

இந்நிலையில், ஐ.சி.சி. ஒருநாள் போட்டி தரவரிசையில் ஆஸ்திரேலியா (121 புள்ளி) மீண்டும் 'நம்பர் ஒன்' இடத்தைப் பிடித்துள்ளது. தென்ஆப்பிரிக்காவுக்கு எதிரான முதல் இரு ஒருநாள் போட்டிகளில் வெற்றி கண்டதால் ஆஸ்திரேலியா முதலிடத்துக்கு முன்னேறியுள்ளது. பாகிஸ்தான் 120 புள்ளிகளுடன் 2வது இடத்திலும், இந்தியா 114 புள்ளிகளுடன் 3வது இடத்திலும், நியூசிலாந்து 106 புள்ளிகளுடன் 4வது இடத்திலும் இருக்கிறது. இவ்விரு அணிகள் மோதும் 3வது ஒருநாள் போட்டி போட்செப்ஸ்ட்ரூமில் இன்று (செவ்வாய்க்கிழமை) நடக்கிறது.

# உலகக் கோப்பை தொடர்: இளம் வீரர்கள் பலருக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது மகிழ்ச்சி: நடராஜன்



சேலம் சீலநாயக்கன்பட்டியில் நடைபெற்ற தனியார் விழாவில் கலந்து கொண்ட வேகப்பந்து வீச்சாளர் நடராஜன் நிருபர்களிடம் கூறியதாவது: இந்தாண்டு உலகக் கோப்பையை இந்திய அணி வெல்லும். விளையாடும் அனைத்து அணிகளுமே பலமானவை என்பதால் சவால் நிறைந்ததாகவே இருக்கும். இருப்பினும் நம் மண்ணில் நடப்பதால் இந்திய அணி கோப்பையை வெல்ல வாய்ப்புகள் அதிகம் உள்ளது. அணியில் இளம் வீரர்கள் பலருக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது மகிழ்ச்சி அளிக்கிறது. இளம் வீரர்களை ஊக்கப்படுத்தும் விதமாக அணி தேர்வு செய்யப்பட்டுள்ளது. அதேவேளையில் இந்திய அணியில்தமிழகத்தைசேர்ந்தவீரர்கள்இடம்பெறாதது மற்றவர்களை போலவே எனக்கும் பெரும் வருத்தமாக உள்ளது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# இந்திய கிராண்ட் பிரீ தடகளம்: முன்னணி வீராங்கனைகளுக்கு அதிர்ச்சி கொடுத்த தமிழக வீராங்கனை



இந்திய கிராண்ட் பிரீ 5 தடகள போட்டி சண்டிகாரில் நேற்று நடந்தது. ஆசிய விளையாட்டு போட்டிக்கான தொடர் ஓட்டத்துக்கான தேர்வாக இது இருந்தது. 400 மீட்டர் ஓட்டம் ஏ மற்றும் பி என இரு பிரிவாக நடத்தப்பட்டது. இதில் தமிழக வீராங்கனை வித்யா ராம்ராஜ் முதலிடத்தை பிடித்தார். அவர் பந்தய தூரத்தை 52.40 வினாடியில் கடந்தார். ஹிமான்சி மாலிக், ஐஸ்வர்யா மிஸ்ரா போன்ற முன்னணி வீராங்கனைகளை பின்னுக்கு தள்ளி விட்டு அவர் முதல் இடத்தை பிடித்தார். 54.40 வினாடியில் கடந்தது அவரது சிறந்த நிலையாகும். மற்றொரு தமிழக வீராங்கனை சுபா வெங்கடேசன் 2வது இடத்தை பிடித்தார். அவர் பந்தய தூரத்தை 52.57 வினாடியில் கடந்தார். உத்தரபிரதேசத்தை சேர்ந்த பி. ராஜி 53.01 வினாடியில் கடந்து 3வது இடத்தை பிடித்தார். ஆண்களுக்கான 100 மீட்டர் ஓட்டத்தில் தமிழக வீரர் சிவக்குமார் 10.01 வினாடியில் கடந்து 3வது இடத்தை பிடித்தார்.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.